சிவகாசி அருகே காளையார்குறிச்சியில் அர்ஜுனா நதிக்கரையில் 8-ம் நூற்றாண்டை சேர்ந்த சுண்ணாம்பு பாறையை குடைந்து உருவாக்கப்பட்ட குடைவரைக் கோயில் ஒன்று உள்ளது. தற்போது வழிபாட்டில் இல்லாத இக்கோயிலில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள தமிழக தொல்லியல் துறை ரூ.65 லட்சம் நிதி ஒதுக்கி உள்ளது.

தர்ம கிணறு: அந்த காலத்தில் குடிநீர் தானம் வழங்குவதற்காக சிறு, சிறு கிணறுகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டன. தர்ம கிணறு என்று அழைக்கப்பட்ட இக்கிணறுகளில் ஒன்று தற்போதும் தேனி அருகே முத்துதேவன்பட்டி அருகே உள்ளது. தற்போது இது பயன்பாட்டில் இல்லாவிட்டாலும் இன்று வரை தொடர்ந்து இந்த தர்ம கிணறு பராமரிக்கப்பட்டு வருகிறது.



26 ஆண்டுகளுக்கு பிறகு

பழநி வீர துர்க்கையம்மன் கோயிலில் இன்று கும்பாபிஷேகம்

நாளை திருஆவினன்குடி கோயிலில் குடமுழுக்கு

■ பழநி

26 ஆண்டுகளுக்குப் பிறகு, பழநி வீர துர்க்கையம்மன் கோயில் கும்பாபிஷேகம் இன்று (டிச.7) நடைபெறுகிறது. நாளை (டிச.8) திருஆவினன்குடி கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

பழநி மலையை 'சக்தி'யாக இருந்து அழகு நாச்சியம்மன், வனதுர்க்கை அம்மன், வீரதுர்க்கை அம்மன், மகிஷா சுரமர்த்தினி அம்மன் ஆகியோர் 4 மூலைகளிலும் கோயில் கொண்டு பாதுகாத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதில், பழநி வடக்கு கிரிவீதியில் அமைந்துள்ளது வீர துர்க்கையம்மன் கோயில். பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான இக்கோயிலில் 1999 அக்.29-ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தற்போது, 26 ஆண்டுகளுக்குப் பிறகு இக்கோயிலில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இதற்கான திருப்பணிகள் உபயதாரர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, நேற்று மாலை யாகசாலை பூஜைகள் தொடங்கின.

▲ பழநி திருஆவினன்குடி கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நடைபெற்ற யாகசாலை பூஜை.

இன்று காலை 2-ம் கால யாகசாலை பூஜைகள் முடிந்து, காலை 11 மணிக்கு மேல் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

இதேபோல், 3-ம் படை வீடான பழநி திருஆவினன்குடி கோயிலில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு நாளை (டிச.8) காலை 6.30 மணிக்கு மேல் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

இதை முன்னிட்டு, பழநி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. நேற்று 2, 3-ம் கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

கும்பாபிஷேக நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் துறை அதிகாரிகள் இன்று பழநிக்கு வருகை தர உள்ளனர்.

▲ திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் தை தெப்பத் திருவிழாவையொட்டி தெப்பக்குளத்தில் தண்ணீர் நிரப்பும் பணி தொடங்கியது. படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் தை தெப்ப திருவிழாவுக்காக

தெப்பக்குளத்தில் ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் நிரப்பும் பணி தொடக்கம்

■ மதுரை

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் தை மாதம் நடைபெறும் தெப்பத் திருவிழாவை முன்னிட்டு, தெப்பக்குளத்தில் ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் நிரப்பும் பணி தொடங்கி உள்ளது.

தைப்பூசத் திருவிழா ஜனவரி மாத கடைசியில் நடைபெறுகிறது. தைப்பூசத்தன்று நடைபெறும் தெப்பத் திருவிழா ஜிஎஸ்டி சாலையிலுள்ள தெப்பக்குளத்தில் நடைபெறும். அதற்காக தெப்பக்குளத்தில் தண்ணீர் நிரப்பும்பணி தொடங்கியுள்ளது. அதற்காக தெப்பக்குளத்தை ஒட்டியுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து மோட்டார் மூலம் தண்ணீர் உறிஞ்சி தெப்பக்குளத்தில் நிரப்பப்படுகிறது. மழைக்காலம் என்பதால் அருகிலுள்ள தென்கால் கண்மாயிலிருந்து தெப்பக்குளத்துக்கு தண்ணீர் நிரப்பும் பணிகளை கோயில் நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஓய்வூதியர் சங்க கூட்டம்

■ பழநி

தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கக் கூட்டம், பழநி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் வேலுச்சாமி தலைமை வகித்தார். தொப்பம்பட்டி வட்டாரத் தலைவர் தமிழ்ச்செல்வி, பொருளாளர் சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டாரச் செயலாளர் உமா மகேஸ்வரி வரவேற்றார்.

மாவட்ட துணைத் தலைவர்கள் பாலகிருஷ்ணன், விசாலாட்சி, மாவட்ட இணைச் செயலாளர் விமலா காந்தா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில், குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.6,750 வழங்க வேண்டும்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, 2.57 காரணிப்படி ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட இணைச் செயலாளர் பெரியசாமி நன்றி கூறினார்.

தேனியில் நலத்திட்ட உதவி

■ தேனி

தேனியில் மாவட்ட நிர்வாகம் சார்பில், அம்பேத்கர் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத்சிங் தலைமை வகித்தார்.

தொடர்ந்து, தாயுமானவர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் 1,952 பயனாளிகளுக்கு ரூ.11.38 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இதில் பெரியகுளம் எம்எல்ஏ. சரவணக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார், கோட்டாட்சியர் செய்யது முகமது உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தென்தமிழக வளர்ச்சிக்கு மதுரையின் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்

முதல்வருக்கு அனைத்து தொழில் வர்த்தக சங்கம் வலியுறுத்தல்

■ மதுரை

தென்தமிழக வளர்ச்சிக்கு மதுரையின் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என அனைத்து தொழில் வர்த்தக சங்க நிறுவனத் தலைவர் ரத்தினவேல் வலியுறுத்தினார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: மதுரையில் விமான நிலையம் செல்லும் வழியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, தெற்குவாசல் பகுதியில் உள்ள வில்லாபுரம் மேம்பாலத்தை விரைவில் அகலப்படுத்த வேண்டும். மதுரை முதலீட்டாளர்கள் மாநாடு தென்தமிழக மக்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது. இம்மாநாட்டில், முதல்வர் தலைமையில் உயரதிகாரிகள் அடங்கிய உயர்நிலைக் குழுவை அறிவித்து, போர்க்கால அடிப்படையில்நடவடிக்கை எடுத்து மதுரையின் சுத்தம், சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

▲ ரத்தினவேல்

மதுரை விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக தரம் உயர்த்தப்படுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். நேரடி விமான சேவை அளிக்க 10 நாடுகள் அடங்கிய ஆசியான் கூட்டமைப்பில், 18 சுற்றுலா நகரங்கள் பட்டியலில் மதுரை நகரையும் சேர்க்க வேண்டும்.

மதுரையின் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க நவீன ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மதுரை-திருமங்கலம் சாலையில் கரடிக்கல் அருகே அமைக்க ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதை நிறைவேற்ற வேண்டும். மதுரையிலும் டிரேடு சென்டர் அமைக்க வேண்டும் என்றார்.

பழநியில் டிச.9-ம் தேதி மின் குறைதீர் முகாம்

■ பழநி

பழநி மின்வாரிய செயற் பொறியாளர் அலுவலகத்தில் டிச.9 காலை 11 முதல் பிற்பகல் 1 வரை மின் பயனீட்டாளர் குறை தீர்ப்பு முகாம் நடைபெறும். மேற்பார்வைப் பொறியாளர் பிரபாகரன் தலைமை வகிக்கிறார் என செயற்பொறியாளர் சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.

ujjivan SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநுடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
கிளை அலுவலகம்: எண்.1/1/109, கம்பம் மெயின் ரோடு, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம், தமிழ்நாடு - 625601					
1.	1602210170000118 / 1.Mrs.மனோகரி இளஞ்செழியன் 2.Mr. இளஞ்செழியன்	(!) 17.02.2024 (ii) 16.02.2024 அன்றுள்ளபடி ₹ 6,13,923/- (ரூபாய் ஆறு லட்சத்து பதிமூன்றாயிரத்து இருபத்து மூன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.06.2024 & நேரடி சுவாதீனம் - 21.06.2025	28.11.2025 அன்றுள்ளபடி ₹ 9,80,238.19 (ரூபாய் ஒன்பது லட்சத்து எண்பதாயிரத்து இருநூற்று முப்பத்து எட்டு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்)	₹ 7,62,300/- (ரூபாய் ஏழு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து முன்னூறு மட்டும்)	₹ 76,230/- (ரூபாய் எழுபத்து ஆறாயிரத்து இருநூற்று முப்பது மட்டும்)

சொத்து விவரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் கம்பம் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட நத்தம் சர்வே எண். 775/1, புதிய நத்தம் சர்வே எண்.2240/27, கதவு எண்.222, (மதிப்பீடு வரி எண்.959), வார்டு எண்.2 (பஞ்சாயத்து வார்டு எண்.5), **உடையார் தெரு, கருணாக்காமுதன்பட்டி, கீழகூடலூர் (கிழக்கு) கிராமம் என்னும் முகவரியில் வடக்கு பக்கத்திலுள்ள வீட்டு மனையின் பரப்பு கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 48.5 அடி, வடக்கு தெற்காக இரண்டு பக்கமும் 15.5 அடி, ஆக மொத்தம் 751 ¾ சதுர அடி மற்றும் RCC தளம்போட்ட கடை மற்றும் ஷீட் போட்ட தளம்போட்ட கட்டிடங்கள்** அதனுடன் அனைத்து வசதிகள். மின்சார இணைப்பு S.C. No: 05-559-006-1627 அதனுடன் தண்ணீர் குழாய் இணைப்பு மதிப்பீடு எண்.101 மற்றும் அனைத்து இதர வழக்கமான உரிமைகள். மேற்சொன்ன சொத்தானது முன்னர் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது (மேலும் முன்னர் பஞ்சாயத்து வார்டு எண்.4, பழைய வரி மதிப்பீடு எண்.662, மதிப்பீடு எண்.663) கீழகூடலூர் (கிழக்கு) கிராமம். எல்லைகள்: மேற்கு: பொன்னம்மாள் மற்றும் பால்ராஜ்-க்கு சொந்தமான வீட்டு மனை, தெற்கு: வீட்டு மனையின் மீதமுள்ள பகுதி, வடக்கு: தங்கசாமி, கரம்னானிதேவர் வீட்டு மனை, கிழக்கு: வடக்கு தெற்கு தெரு.

கிளை அலுவலகம்: எண்.24, புதிய அக்ரஹாரம், பழனி ரோடு, JCB மருத்துவமனை அருகில், நேருஜி நகர், திண்டுக்கல், தமிழ்நாடு-624001.					
2.	1607210170000029 / 1. Mr.முருகேசன் P 2. Mrs.வெங்டேஸ்வரி 3. Mr.பெரியசாமி 4. Mrs.வெள்ளையம்மாள்	(i) 03.06.2021 & 01.06.2021 அன்றுள்ளபடி ₹ 14,01,412/- (ரூபாய் பதினான்கு லட்சத்து ஒன்றாயிரத்து நானூற்று பன்னிரெண்டு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 21.09.2022 & நேரடி சுவாதீனம் - 25.07.2025	28.11.2025 அன்றுள்ளபடி ₹ 33,86,767.09 (ரூபாய் மூப்பத்து மூன்று லட்சத்து எண்பத்து ஆறாயிரத்து எழுநூற்று அறுபத்து ஏழு மற்றும் பைசா ஒன்பது மட்டும்)	₹ 14,08,000/- (ரூபாய் பதினான்கு லட்சத்து எட்டாயிரம் மட்டும்)	₹ 1,40,800/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூறு மட்டும்)

சொத்து விவரம்: பழனி பதிவு மாவட்டம், வடமதுரை சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட **சிலுவத்தூர் கிராமம், திண்டுக்கல் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்** என்னும் முகவரியில் சர்வே எண்.305/1A-ல் 0-51.50 ஏர்ஸ் இதில் 1 ஏக்கர் 27 சென்டு இதில் கிழக்கு பக்கத்தில் நடுவில் 0.63 ½ சென்டு இதில் வடக்கு - மேற்கு மூலையில் 1வது பேஸ் அளவுகள்: கிழக்கு மேற்காக இருதிசையிலும் 30 அடி, வடக்கு தெற்காக மேற்கு திசையில் 44 அடி, கிழக்கு திசையில் 33 அடி, மொத்தம் 1155 சதுர அடி, மேலும் இதில் 0-63 ½ சென்டு, இதில் வடக்கு மேற்கு மூலையில் 0-06 ½ சென்டு தவிர, மற்றும் மீதமுள்ள 0-57 சென்டு, இதில் 2வது பேஸ் அளவுகள்: கிழக்கு மேற்காக இருதிசையிலும் 34 அடி, வடக்கு தெற்காக மேற்கு திசையிலும் 34 அடி, மொத்தம் 1530 சதுர அடி மற்றும் இரண்டு பேஸ்களின் மொத்த பரப்பு 2685 சதுர அடி. எல்லைகள்: மேற்கு: வீடு M, தெற்கு: 13 அடி அகல கிழக்கு மேற்கு பொதுவழிப்பாதை, வடக்கு: நத்தம்புறம்போக்கு, கிழக்கு: பரமேஸ்வரி வீடு, வடக்கு: தெற்கு பொது சந்து. இதில் வீட்டு மனையின் பரப்பு கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 31 அடி, தெற்கு திசையில் 27 அடி, வடக்கு தெற்காக இருதிசையிலும் 39 அடி ஆகமொத்தம் **1131 சதுர அடி அல்லது 105.07 சதுர மீட்டர் வீட்டு மனை, இதில் கட்டப்பட்டுள்ள வீடு** அதனுடன் அனைத்து வசதிகள், தண்ணீர் குழாய் இணைப்பு எண்.117, அனைத்து வழக்கமான உரிமைகள்.

3.	1602210170000055 / 1. Mrs.அருணா P 2. Mr.பொன்ராஜ் M 3. Mr.பிரபாகரன்	(i) 17.07.2021 & 16.07.2021 அன்றுள்ளபடி ₹ 18,78,403/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து நானூற்று மூன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 17.03.2022 & நேரடி சுவாதீனம் - 05.07.2025	28.11.2025 அன்றுள்ளபடி ₹36,03,925.13 (ரூபாய் மூப்பத்து ஆறு லட்சத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து மற்றும் பைசா பதிமூன்று மட்டும்)	₹ 16,42,500/- (ரூபாய் பதினாறு லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்)	₹ 1,64,250/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)

சொத்து விவரம்: பழனி பதிவு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட நத்தம் சர்வே எண்.189/1, 3, கதவு எண்.124/1-9, **ஒட்டன்சத்திரம் கிராமம், தும்மிச்சம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக 23 அடி, வடக்கு தெற்காக 34 அடி, ஆகமொத்தம் **782 சதுர அடி.** இதில் கட்டப்பட்டுள்ள ஒட்டு வீட்டின் பரப்பு கிழக்கு மேற்காக 20 ½ அடி, வடக்கு தெற்காக 17 அடி, ஆகமொத்தம் 348½ சதுர அடி **முக்கோண வடிவில் கட்டப்பட்டுள்ள வீடு மற்றும்** அதனுடன் அனைத்து வழக்கமான உரிமைகள், வசதிகள், மின்சார இணைப்பு S.C.எண்.253, தண்ணீர் குழாய் இணைப்பு எண்.985, மற்றும் நத்தம் செட்டில்மெண்ட் பட்டா எண்.1878-ன் படி நத்தம் செட்டில்மெண்ட் சப்டிவைட் சர்வே எண்.200/43-ல் 0.00.55 சதுர மீட்டர் சொத்து. அதனுடன் அனைத்து உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள், நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: மேற்கு: திருமல் போயன் வீடு, தெற்கு: முத்துசாமி வீடு, வடக்கு: கிழக்கு-மேற்கு வழிப்பாதை, கிழக்கு: முத்துவேல் வீடு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 31.12.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 30.12.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	29.12.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தேதி: 07.12.2025

வரி விளம்பரங்கள்

தொழில்

தொழில் சேவை

DEBTORS ANONYMOUS
https://Debtorsanonymous.org
https://tndebtorsanonymous.in/
கடனாளிகளுக்கு நம்பிக்கை மற்றும் மீட்பு.
கடனாளிகள் அனாமதேயம் தமிழ்நாடு
9952066400

பொது

பொது அறிவிப்பு

மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம், மதுரை
M.C.No: 132 / 2025

G.பசும்பொன், த/பெ. P.T.கணபதி, எண்.30/A, மேலதோப்பு தெரு, கீரைத்துறை, மதுரை–625001. (தனக்காகவும், தனது மைனர் குழந்தை மகிழிசை காகவும்)
--- மனுதாரர்
--- எதிர் ---
C.பிரபாகரன், த/பெ.சந்திரன், எண்.82, நாகு பிள்ளை தோப்பு, புது மகாளிபட்டி ரோடு, மதுரை–625001.
--- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர், தனக்காகவும் தனது மைனர் குழந்தைக்காகவும் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்திருக்கும் வழக்கில் மேற்படி எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் ஆஜராக 09.01.2026–ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி வாய்தா தேதி அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

P.பிரதீப் M.B.A.,B.L.,
B.சிவதானுலிங்கம் M.B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், மதுரை.